பணியாற்றுவதற்குரிய அந்தச் சிறப்பு இயல்பு ஆண்களிடத்தில் அவ்வளவாக இல்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆகவே, சில ஆண்டுகளாக ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பயிற்சி பெற்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாக இல்லை. ஏறத்தாழ 500 பேர் பயிற்சி பெற்றவர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, 1971-ல் பயிற்சி பெற்ற பல பேர் வேலையில்லாமல் இருப்பதால், அந்தத் துறையில் பயிற்சி தருவதை ஒத்தி வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சிலவிதமான பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதே நேரத்தில் அதிகமான பேர்கள் வேலையில் இல்லாமல் இருக்கும் நிலையையும் உண்டாக்கக் கூடாது. எனவே தான் ஏறத்தாழ சில ஆண்டுகளுக்கு முன்பு 200 பேர் பயிற்சி பெற்று வந்தார்கள். அதை 125 ஆகக் குறைத்து இப்போது பயிற்சி தரப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுகிறவர்கள் பயிற்சியின் போதே பணியாற்றுகிற வாய்ப்பு இருப்பதால் —கல்லூரிகளில், மருத்துவமனைகளில்—பயிற்சியும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பயிற்சி 3½ ஆண்டுக் காலம் தரப் படுகிறது. இந்தப் பயிற்சியின் விளைவாக அவர்களுக்கும், அந்தத் துறையைச் சார்ந்த அந்தப் பணிக்கும் உதவிகரமாக இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : துணைத் தலைவரவர்களே, மருத்துவமனைகளில் செவிலியர்களின் எண்ணிக்கை போதாது என்று சொல்லப் படுகிறதே, அதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் எந்த அளவுக்கு அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு அவ்வப்போது செய்யப் பட்டு வருகிறது.

Conservancy work at Madras.

* 147 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether bullock carts used for conservancy work at Madras are to be given up; and

(*b*) if so, the details thereof?

1972 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மாட்டுவண்டிகளுக்குப் பதிலாக மோட்டார் வாகனங்களை உபயோகப்படுத்தும் பெரிய அளவிலான ஒரு திட்டம் மாநகராட்சியின் தீவிர பரிசிலனையில் உள்ளது.

New protein-rich infant food.

*148 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that protein-rich infant food has been developed at the Institute of Rural Health and Family Planning at Gandhigram in Madurai district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) காந்தி கிராமத்தில் உள்ள கிராம நலம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு நிறுவனம், வறுத்த கம்பு மாவு, வறுத்த பச்சை பருப்பு மாவு, வறுத்த கடலை பிண்ணுக்கு மாவு, மூன்றையும், வெல்லத்துடன் கலந்து வின்ஃபுட் (Warifood) என்ற பெயரில் குழந்தைகளுக்கான புதிய உணவு ஒன்றை கண்டு பிடித்திருக்கின்றது.

Physiotherapist Course

*149 Q.—THIRU D.S.A. SIVAPRAGASAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether applications were invited for admission to the Physiotherapist Course in the Madras Medical College this year?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்தப் பயிற்சிக்கான விண்ணப்பங்களுக்கு எந்தெந்தப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது? எவ்வளவு பேர்கள் விண்ணப்பம் செய்தார்கள்? எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 6—5—72 அன்றும், மெயில் பத்திரிகையில் 4—5—72 அன்றும், அரசாங்கத்தினுடைய தமிழரசு ஏட்டில் 15—5—72